ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 4.1 – கதிராயிரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.1 – கதிராயிரம்

‡ கதிர் ஆயிரம் இரவி ⋆
கலந்தெரித்தால் ஒத்த நீள் முடியன் ⋆
எதிர் இல் பெருமை இராமனை ⋆
இருக்கும் இடம் நாடுதிரேல் ⋆
அதிரும் கழற் பொரு தோள் ⋆
இரணியன் ஆகம் பிளந்தரியாய் ⋆
உதிரம் அளைந்த கையோடிருந்தானை ⋆
உள்ளவா கண்டார் உளர் ‖ **4.1.1** ‖

நாந்தகம் சங்கு தண்டு ⋆
நாண் ஒலிச் சார்ங்கம் திருச் சக்கரம் ⋆
ஏந்து பெருமை இராமனை ⋆
இருக்கும் இடம் நாடுதிரேல் ⋆
காந்தள் முகிழ் விரல் சீதைக்காகிக் ⋆
கடுஞ்சிலை சென்றிறுக்க ⋆
வேந்தர் தலைவன் சனகராசன் தன் ⋆
வேள்வியில் கண்டார் உளர் ‖ **4.1.2** ‖

கொலையானைக் கொம்பு பறித்துக் ⋆
கூடலர் சேனை பொருதழியச் ⋆
சிலையால் மராமரம் எய்த தேவனைச் ⋆
சிக்கென நாடுதிரேல் ⋆
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று ⋆

தடவரை கொண்டடைப்ப ⋆
அலை ஆர் கடற்கரை வீற்றிருந்தானை ⋆
அங்குத்தைக் கண்டார் உளர் ‖ **4.1.3** ‖

தோயம் பரந்த நடுவு சூழலில் ⋆
தொல்லை வடிவு கொண்ட ⋆
மாயக் குழவி யதனை நாடுறில் ⋆
வம்மின் சுவடுரைக்கேன் ⋆
ஆயர் மடமகள் பின்னைக்காகி ⋆
அடல் விடை ஏழினையும் ⋆
வீயப் பொருது வியர்த்து நின்றானை ⋆
மெய்ம்மையே கண்டார் உளர் ‖ **4.1.4** ‖

நீர் ஏறு செஞ்சடை நீலகண்டனும் ⋆
நான்முகனும் முறையால் ⋆
சீர் ஏறு வாசகஞ்செய்ய நின்ற ⋆
திருமாலை நாடுதிரேல் ⋆
வார் ஏறு கொங்கை உருப்பிணியை ⋆
வலியப் பிடித்துக் கொண்டு தேர் ஏற்றி ⋆
சேனை நடுவு போர் செய்யச் ⋆
சிக்கெனக் கண்டார் உளர் ‖ **4.1.5** ‖

பொல்லா வடிவுடைப் பேய்ச்சி துஞ்சப் ⋆
புணர்முலை வாய் மடுக்க வல்லானை ⋆
மா மணிவண்ணனை ⋆
மருவும் இடம் நாடுதிரேல் ⋆
பல்லாயிரம் பெருந் தேவிமாரொடு ⋆
பௌவம் எறி துவரை ⋆

எல்லாரும் சூழச் சிங்காசனத்தே ⋆
இருந்தானைக் கண்டார் உளர் ॥ **4.1.6** ॥

வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த் திருச் சக்கரம் ⋆
ஏந்து கையன் ⋆
உள்ள இடம் வினவில் ⋆
உமக்கிறை வம்மின் சுவடுரைக்கேன் ⋆
வெள்ளைப் புரவிக் குரக்கு வெல்கொடித் ⋆
தேர்மிசை முன்பு நின்று ⋆
கள்ளப் படைத்துணை ஆகிப் ⋆
பாரதம் கைசெய்யக் கண்டார் உளர் ॥ **4.1.7** ॥

நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற ⋆
அரசர்கள் தம் முகப்பே ⋆
நாழிகை போகப் படை பொருதவன் ⋆
தேவகி தன் சிறுவன் ⋆
ஆழி கொண்டன்றிரவி மறைப்பச் ⋆
சயத்திரதன் தலையை ⋆
பாழில் உருளப் படை பொருதவன் ⋆
பக்கமே கண்டார் உளர் ॥ **4.1.8** ॥

மண்ணும் மலையும் மறி கடல்களும் ⋆
மற்றும் யாவும் எல்லாம் ⋆
திண்ணம் விழுங்கி உமிழ்ந்த தேவனைச் ⋆
சிக்கென நாடுதிரேல் ⋆
எண்ணற்கரியதோர் ஏனம் ஆகி ⋆
இருநிலம் புக்கிடந்து ⋆

வண்ணக் கருங்குழல் மாதரோடு ⋆
மணந்தானைக் கண்டார் உளர் ॥ **4.1.9** ॥

‡ கரிய முகில் புரை மேனி மாயனைக் ⋆
கண்ட சுவடுரைத்து ⋆
புரவி முகம் செய்து செந்நெல் ஓங்கி ⋆
விளை கழனிப் புதுவை ⋆
திருவிற் பொலி மறைவாணன் ⋆
பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும் ⋆
பரவு மனம் உடைப் பத்தர் உள்ளார் ⋆
பரமன் அடி சேர்வர்களே ॥ **4.1.10** ॥

அடிவரவு — கதிர் நாந்தகம் கொலை தோயம் நீரேறு பொல்லா வெள்ளை நாழிகை மண்ணும் கரிய அலம்பா

கதிராயிரம் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்